<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 10.03.2026

அசல் வழக்கு எண். 188/2013

பி.சா.2 – முரளிகிருஷ்ணன் , த/பெ. பாக்கியநாதன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>குறுக்கு விசாரணை</u>

ஈஸ்ட் வெஸ்ட் ரிசார்ட்டில் நீங்கள் எத்தனை ஆண்டுகளாக மேனேஜராக பணி புரிகிறீர்கள் என்றால் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறேன். 02.02.2026 தீர்மானத்தின் படி உங்களுக்கு சாட்சியம் அளிக்க கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ1ல் பங்குதாரர்கள் தீர்மானம் போட்டு கொடுத்ததாக இல்லை என்று சொன்னால் சரிதான். 02.02.2026 தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ2ல் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும். பதிவு செய்யப்பட்டதற்கான விவரங்கள் இல்லை என்று சொன்னால் சரியில்லை. அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை பதிவு செய்ததற்கான காரணங்கள் இல்லை என்று சொன்னால் சரியில்லை. பி.சா.ஆ3 பெயர் மாற்றம் செய்யப்பட்டது எப்பொழுது என்றால் அதற்கான விபரம் எனக்கு தெரியும். மின் இணைப்பு இரண்டு இணைப்பு இதற்கு முன்பாக ஜேம்ஸ் பெடரிக் என்பவர் பெயரில் இருந்தது என்றால் தெரியாது நந்தினி மற்றும் நடராஜன் பெயரிலிருந்து இணைப்பு அவர் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. நந்தினி நடராஜன் பெயரில் எத்தனை பில் கட்டப்பட்டுள்ளது என்றால் ஈஸ்ட் வெஸ்ட் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அவர்கள் பெயரில்தான் இருக்கிறது நீங்கள் பணிக்கு வந்த பிறகு அவ்வாறு இருந்தது என்றால் சரிதான். கடந்த 2009 முதல் 2026 வரை காலகட்டத்திற்கான அனைத்து பில்களும்

தாக்கல் செய்ய தயாராக இருக்கிறீர்கள் என்றால் சரிதான். நந்தினி தேவி மற்றும் நடராஜன் பெயரில் சமீபத்தில் தான் மாற்றம் செய்தீர்கள் வழக்கிற்காக நீண்ட நாளாக இருப்பதாக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. ஈஸ்வரி ரிசாட்டின் அடிமனை சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. ஈஸ்வரி ரிசாட்டின் அடிமனை கட்டிடங்கள் எந்த எந்த சர்வே எண்ணில் அமைந்து உள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றால் தெரியாது. வழக்கில் சாட்சியம் சொல்ல வந்து உள்ளீர்கள் அதனுடைய சர்வே எண் தெரியுமா என்றால் 1487/5ஏ ஆகும். அந்த சர்வே எண்ணில் அடங்கிய சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து என்றால் அதைப் பற்றி தெரியாது. வழக்கின் வாதி தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்தீர்களா என்றால் பார்வையிட்டேன். வா.சா.ஆ1 என்பது வாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்ட ஆவணம் என்றால் அந்த ஆவணம் தகவல் எனக்கு தெரியாது. பார்வையிட்டேன் என்று பொய் சொன்னீர்களா என்றால் தெரியாது. வா.சா.ஆ1 ஜேம்ஸ் பெடரிக் வாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்றால் அந்த ஆவணம் நான் பார்க்கவில்லை அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்துக்கான பட்டா பார்த்தீர்களா என்றால் தெரியாது. எதற்காக நீங்கள் சாட்சியம் சொல்ல வந்தீர்கள் என்றால் வழக்கு சம்பந்தமாக சாட்சி சொல்ல வந்தேன். ஆகவே தான் வழக்கு சம்பந்தமான சொத்து விவரங்களை பற்றி நான் கேட்கிறேன் என்றால் சரியில்லை. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் வாதி என்பவரால் வழக்கு சொத்து ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டதாக உங்களது வாக்குமூலத்தில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதி அவர்களின் சொத்து ஆகவே நீங்கள் ஒப்படைத்ததாக சொல்லி

உள்ளீர்கள் என்றால் சரிதான் ஒப்படைத்தார்கள். வழக்கில் ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்திற்கு சொத்து ஒப்படைக்கப்பட்டது என்று சொல்லி உள்ளீர்கள் அவ்வாறு தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டது என்று காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு ஆவணங்கள் இருக்கிறதா உங்கள் வசம் என்றால் எனக்கு தெரியாது. வாதி நீங்கள் கூறுவது போல் எந்த சொத்தையும் ஒப்படைக்கவில்லை ஆவணங்கள் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை நீங்கள் வழக்கிற்காக வேண்டும் என்று பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. சர்வே எண் 1487/5ஏ மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 7 லிருந்து 8 சென்ட் இருக்கும். உங்களுக்கு சரியான அளவு கூட தெரியவில்லை என்று சொன்னால் சரி இல்லை. சர்வே எண் 1487/5ஏ எங்கு அமைந்துள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றால் எங்கள் சொத்துக்கு முன்பாக இருக்கிறது. எதற்கு முன்பாக இருக்கிறது என்றால் வரைபடத்தை பார்த்தால் தெரியும். சர்வே எண் 1487/5ஏ நீள, அகலம் தெரியாது என்றால் தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே என்ன பிரச்சனை நடைபெற்றது என்றால் முகப்பு பகுதியில் சொத்தில் பிரச்சனை இருக்கிறது என்று தெரியும். வேறு பிரச்சனை எதுவும் தெரியாது என்றால் கிரயம் பத்திரம் தொடர்பான வழக்குகள் இருப்பது தெரியும். நில அபகரிப்பு சம்பந்தமாக வாதி பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்கிற விவரம் தெரியும். நில அபகரிப்பு வழக்கு சம்பந்தமாக பிரதிவாதி கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்தார் என்கிற விவரம் தெரியுமா என்றால் இரண்டாவது

பிரதிவாதி ஜாமினில் வந்தார் தெரியும். முதல் பிரதிவாதி அந்த வழக்கில் முன் ஜாமீன் பெற்றார் என்றால் சரிதான். வாதி மத்தியஸ்தர் நியமனம் செய்ய ஆர்பிட்ரேஷன் சட்டப்படி 4மனுக்கள் தாக்கல் செய்ததாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வியாபாரத்தை நடத்திக் கொள்ளலாம் என்று அந்த உத்தரவில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் தெரிவித்து உள்ளது என்றால் சரிதான். நீங்கள் வழக்கில் ஒரு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ7 முதல் தகவல் அறிக்கை உடன் புகைப்படங்களை இணைத்து தாக்கல் செய்து உள்ளீர்கள் அந்த புகைப்படங்கள் காவல் நிலையத்தில் உங்களால் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். புகைப்படங்கள் காவல் நிலையத்தில் உங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் மற்றும் முதல் தகவல் அறிக்கை இரண்டும் வெவ்வேறான ஆவணம் என்றால் புகைப்படம் எங்களுடைய ஆவணம், முதல் தகவல் அறிக்கை காவல் நிலைய ஆவணம் ஆகும். காவல் நிலையத்தில் வழங்கப்பட்டது போல் தோற்றமளிப்பதற்காக நீங்கள் இரண்டு ஆவணங்களையும் ஒன்றாக தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. புகைப்படங்களை மெய்பிப்பதற்காக எந்த ஒரு தகவல் தரவுகளையும் நீங்கள் கொடுக்கவில்லை என்றால் சரியில்லை. ஆகவே அதனை ஒரு சான்றாக பரிசீலிக்க முடியாது என்றால் சரியில்லை. பி.சா.ஆ.4 எதற்காக தாக்கல் செய்தீர்கள் என்றால் ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்ட சுற்றுசுவர் மத்தியிலிருக்கும் சொத்து குறித்து வழக்கறிஞர் அறிக்கை ஆகும் ஆகவே அதனை தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் கூறுவது போல் அந்த ஆவணம் இல்லை நீங்கள்

வழக்கில் தவறாக சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் எந்த தேதியில் என்ன நடந்தது என்கிற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் தெரியும். கடந்த 2014 ஆம் ஆண்டு 31 அக்டோபர் அன்று அளிக்கப்பட்ட புகாராகும். ஆனால் உங்கள் வாக்குமூலத்தில் 31.08.2016 அன்று குறிப்பிட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். வாதி பிரதிவாதி மீது புகார் கொடுத்ததின் காரணமாக நீங்கள் வேண்டுமென்று அவருக்கு எதிராக ஒரு பொய்யான புகார் கொடுத்தீர்கள் என்று சொன்னால் சரி இல்லை. சுற்றுசுவர் இடித்ததற்கான புகாராகும். சர்வே எண் 1487/5ஏ என்கிற சொத்து வாதிக்கு சொந்தமான சொத்து அவர்கள் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் அதனை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்த பொழுது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியில்லை. 2009 ஆம் ஆண்டு முதல் ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்தின் மின் இணைப்புக்கான கட்டிடம் அந்த பகுதியில் இருக்கிறது அது மட்டும் அல்லாமல் ஊழியர்கள் தங்கும் விடுதியில் அங்கு கட்டப்பட்டுள்ளது. ஊழியர்கள் தங்கும் விடுதி பற்றி உங்களுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் மின் இணைப்பு உள்ளது என்று சொல்லி உள்ளேன் ஊழியர் தங்கும் விடுதி பற்றி கூறியுள்ளேன் நீங்கள் அவ்வாறு சொல்லவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. ஈஸ்ட் வெஸ்ட் நிறுவனத்தில் 2009 ஆம் ஆண்டு முதல் வாதி பங்குதாரராக இருந்து வருகிறார் என்றால் 2010 அன்று விலகி விட்டார் அதற்கு முன்பாக இருந்தார். வாதி பங்குதாரர் நிறுவனத்தில் இருந்து விலகவில்லை அவ்வாறு விலகியதாக கூறுவது தான் வழக்கில் பிரச்சனை என்று சொன்னால் சரியில்லை அவர் கடந்த

17.03.2010 அன்று விலகிவிட்டார். அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரச்சனைக்காக மத்தியஸ்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தான். நிறுவனத்திலிருந்து விலகியது வரை தெரியும் அதற்கு மேல் எனக்கு தெரியாது. மத்தியஸ்தம் குறித்து வழக்கு பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் தெரியாது. மத்தியஸ்தம் வழக்கு பற்றி உங்களுக்கு நன்கு தெரியும் தெரிந்தே பொய் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. பங்குதாரர் நிறுவனத்தின் மேலாளர் என்கிற முறையில் அதனை எனக்கு தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. வழக்கு சொத்து பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்காக நீதிமன்றம் வந்து பொய் சாட்சி சொல்கிறீர்கள் உங்களுடைய சாட்சியம் ஏற்படுவது அல்ல என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram